14th December 1961]

Iron for public sector (purchase)

* 2305. Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1957 முதல் 1960 வரை சர்க்கார் நடத்தும் தொழிற் சாலைகளின் கட்டிட வேலைகளுக்கு வெளி மார்க்கெட்டுகளில் **(open market)** எவ்வளவு இரும்பு வாங்கப்பட்டது?

(இ) என்ன விலைக்கு வாங்கப்பட்டது?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) 1,305.5 metric tonnes.

(இ) Rs. 11,15,537.

SRI V. K. KOTHANDARAMAN: ஓபன் மார்க்கெட்டில் அதிக் விலை கொடுத்து வாங்கக்கூடிய காரணத்தினால் சர்க்காருக் குப் பெரிய அளவில் நஷ்டம் ஏற்படுகிறது அல்லவா? ஆகவே கண்ட்ரோல் விலைக்கு எவ்வளவு தேவைபடுகிறதோ அந்த அளவுக்கு இரும்பு வாங்க முயற்சிக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் சொல்கிறபடி நடந்துகொள்ளத்தான் சர்க்காரும் முயற்சி செய்கி றது. கூடுமான அளவுக்கு நமக்கு தேவையான இரும்பு, எஃகுப் பொருள்களைக் கோட்டா மூலம் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று பல முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் வெகுவேகமாக முன்னேற்றம் அடைந்துவருகிற நமது என்ஜினி யரிங் தொழில்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினால் விலை கொஞ்சம் கூடுதலாகப் போனாலும் ஓபன் மார்க்கெட்டில் விலை கொடுத்து வாங்குகிறோம். ஆனால் கூடுமான அளவுக்கு அதை அலாட்மெண்டு மூலமாகப் பெறுவதற்கே முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

Waram cultivators (loan)

* 2309. Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வார குத்தகை சாகுபடியாளர்களுக்கு சொந்த நில சாகுபடி செய்யும் பயிர்களின்மீது கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் கொடுப்பதுபோல் கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லையேல், காரணமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) Yes, Sir.

(இ) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN: இதற்கு முன்னதாக ஒரு கேள்விக்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். இதுபோன்று வாரச்சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குக்கூட கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? இல்லை யென்றால் இனிமேலாவது செய்வதற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போதே செய்யப்பட்டிருக்கிறது. புல் பினன்ஷியல் ஸ்கீம் அமுலில் உள்ள பகுதிகளில் வாரச் சாகுபடியாளர்களுக்கும், குத்தகைக்கு சாகுபடி செய்கின்றவர்களுக்கும் கடன் உதவி கொடுக்கப்படுகிறது. அதற்காகத் தனியாக க்ரெடிட் ஸ்கீம் ஒன்றுகூட ஏற்பாடு செய்திருக்கிறோம்.

Transport workers (Test)

* 2311. *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் போக்குவரத்துக்கு (State Transport தேவையான ட்ரைவர், கண்டக்டர், Checking inspector) முதலியவர்களுக்கு Test அளிக்கப்படுகிறதா ?

(இ) எந்த அளவுக்குப் படித்தவர்களை அனுமதிக்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(இ) (i) *Drivers*.—Candidates for appointment as Drivers are given a trade test with a view to assess their driving ability. Those who do not come up to the standard are given training for such period as recommended by the officer testing the candidates. No educational qualification has been prescribed.

(ii) *Conductors*.—The candidates are subjected to a preliminary medical check-up. Those who are found fit are then given one month's practical and theoretical training. Conductors are selected for appointment from among the list of candidates who came out successful in the training.

The minimum educational qualification prescribed is study upto VI Form.

(iii) *Checking Inspectors*.—Only conductors who do not possess the minimum general educational qualification but have passed III Form in a recognized school and completed 10 years of service as conductors have to sit for a test to be conducted by the Madras State Transport Department for promotion as Checking Inspectors/Time-keepers.

No such test has been prescribed for promotion or direct recruitment for those who possess the minimum general educational qualification, viz., a pass in S.S.L.C. examination with specified percentage of marks for eligibility to Government service.

Industrial estates

* 2313. *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் நமது ராஜ்யத்தில் கூட்டுறவு அடிப்படையில் தொழில் பேட்டைகள் எத்தனை எங்கெங்கே ஆரம்பிக்கப்படும் ?

(இ) அதன் விவரங்களைப் பற்றிய ரிப்போர்ட் மேஜைமேல் வைக்கப்படுமா ?